1972 மார்ச் 30)

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசு ஸ்டே கொடுக்க வில்லை யென்றால் அவர்கள் வழக்குமன்றங்களுக்குச் சென்று ஸ்டே வாங்கு வார்கள். ஸ்டே கொடுப்பது சட்டப்படி முறையான செயலாகும்.

திரு. டி. வி. சம்பத் : தலைவரவர்களே, அரிசனங்கள் வீட்டு மனைகளுக்காக மனுச் செய்தால், அதிகாரிகள் அதைப் பரிசீலனை செய்யும் நேரத்தில் அதை அரசாங்கத்திற்கு அனுப்புவதற்குள் அந்த நிலத்திற் குரியவர்கள் அந்த நிலத்தில கிணறுகளை வெட்டியோ அல்லது வேறு ஏதாவது உயிருள்ள இனங்களை வளர்த்தோ ஆர்ஜிதம் செய்வதைத் தடுப்பதற்கு ஏதுவான முறையில் இருக்கிறது. எனவே, உடனடியாக அந்த நிலத்தை வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர்கள் நிலத்தை எடுக் கிறோம் என்று அறிவிப்புக் கொடுத்து விட்டால், 4 (1) நோட்டிபிகேஷன் கெஜட்டில் வந்துவிட்ட பிறகு வீடு கட்டவோ, கிணறு வெட்டவோ அல்லது வேறு பலனுள்ள காரியங்களைச் செய்தார்களானால் அரசு கிணற்றையும் சேர்த்துக் கூட எடுக்கிறது. ஆனால் சில நேரங்களில் அப்படிப்பட்டவர்கள் வழக்கு மன்றங்களுக்குச் சென்று கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். வழக்கு மன்றத்தில் எத்தனை ஆண்டுகள் ஆகிறதோ அதுவரையில் பொறுத்திருக் கிறோம். வழக்கில் நம் பக்கம் தீர்ப்பாக்கப்பட்டால் நாம் எடுக்கிறோம். அவர்கள பக்கம் தீர்க்கப்பட்டால் நாம் ஆலோசனை செய்கிறோம். பிறகு அந்த நிலம் நல்லமுறையிலே பயிரிடப்பட்டு செழிப்பாக இருக்கிறதா, கிணறு அந்த இடத்தில் செயல்படுகிறதா என்று அறிந்து அரசு விட்டுவிடுகிறது. சில இடங்களில், இருந்தாலும் அரசு எடுக்கிறது.

திரு. எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீடு நெருக்கடியாக இருக்கும் இடங்களி லெல்லாம் அந்த ஊர்களை விரிவு படுத்த வேண்டுமென்று மனுச் செய்தால் அரிசன நல அதிகாரிகள் மனுவைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்துக் கொடுக்க வேண்டும். அப்படி அவர்கள் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னாலும், பக்கத்திலிருக்கும் நிலச்சுவான்தார்களிடத்தில் ஒருவித மாக அவர்களோடு கலந்து அரிசனங்களுக்கு விரோதமாகச் செயல்படு கிறார்கள் என்பதை அரசு அறியுமா ? அல்லது இனிமேலாவது ஒரு மனுக் கொடுத்தால் உண்டு அல்லது இல்லை என்று 3 மாதத் திற்குள்ளாகத்தெரிவிக்க முடியுமா ? அந்த வேலைகளைத் துரிதமாகச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசு சார்பில் நில ஆர்ஜிதம் செய்யும் அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளை நிலச் சொந் தக்காரர்களோடு சேர்ந்து கொண்டு செய்கிறார்கள் என்று இதுவரையில் அரசுக்குப் புகார் வரவில்லை. நிலச் சொந்தக்காரர்கள் தான் சட்ட மன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு ஸ்டே கொடுக்க வேண்டும். நிலத்தைக் கொடுக்க முடியாது என்று சொல்வதாகப் புகார் வருகிறது. ஆகவே, அரசுச் சார்பில் அதிகாரிகள் தவறு செய்தால் மாண்புமிகு அங்கத்தினர்கள் எழுதிக் கொடுத்தால் அந்த அதிகாரியின் மீது நட வடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.